கேட்கிறார்களோ அந்த டிராக்டரை வாங்குவதற்கு அனுமதி தருகிறார்களா? அல்லது டெவலப்மெண்ட் பேங்க் இதைத்தான் வாங்க வேண்டுமென்று சொல்கிறதா?

மாண்புமிகு திரு. மன்னை. ப. நாராயணசாமி: தலைவரவர்களே, இதைத்தான் வாங்க வேண்டுமென்று சொல்லவில்லை, விவசாயிகள் எதைக் கேட்கிறார்களோ அதைத் தருகிறார்கள்.

திரு. மு. சண்முகம்: தலைவரவர்களே, விவசாயிகளுக்கு டிராக்டர்கள் கடன் மூலமாக வழங்க அனுமதிக்கப்பட்டு, உலக வங்கி வெளிநாடுகளில் 1,500 டிராக்டர்களுக்கு மேல் தமிழ் நாட்டிற்கு வழங்க இருந்தது முழுவதும் அனுமதிக்கப்பட்டு, வழங்கப்பட்டுவிட்டதா?

மாண்புமிகு திரு. மன்னை. ப. நாராயணசாமி: தலைவரவர்களே, அதைப்பற்றி பேசியாகிவிட்டது. 1,500 டிராக்டர்கள் வரையிலும் இந்த ஆண்டுக்கு—1975-76—ஆம் ஆண்டுக்கு—கொடுக்கப்படுவதாகப் பேச்சுவார்த்தைகள் நடந்து கொண்டிருக்கின்றது. அநேகமாக இந்த மாத இறுதிக்குள் ஒப்பந்தமாகிவிடும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

சங்கராபுரம் ஒன்றியம் பள்ளிக் கட்டடங்கள்

* 80 வினா—**திரு. ந. நாச்சியப்பன்**: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்கராபுரம் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த மணலூர், மேல் சிறுவனூர் ஊர்களில் பள்ளிகளுக்குச் கட்டடம் கட்டும் பணி இன்னும் பூர்த்தியாகவில்லை என்பது உண்மையா?

(இ) ஆம் எனில், காலதாமதத்திற்குக் காரணம் என்ன?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (அ) மணலூரில் பள்ளிக் கட்டடம் கட்டி முடிக்கப்பட்டு விட்டது. மேல் சிறுவனூரில் 31—3—1976-க்குள் பள்ளிக் கட்டடம் கட்டி முடிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

(இ) சிமெண்ட் கிடைப்பதில் ஏற்பட்டுள்ள தடங்கலே மேல் சிறுவனூரில் பள்ளிக் கட்டடம் கட்டி முடிக்க தாமதத்திற்குக் காரணம்.